செய்தி வெளியீடு எண்: 798 நாள்: 08.12.2007

கால்நடை பராமரிப்புத்துறையில் புதிதாக பணியமர்த்தப்பட்ட கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் துறையின் இதர கால்நடை மருத்துவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி கருத்தரங்கு செய்தி வெளியீடு.

கால்நடை பராமரிப்புத்துறையில் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட 244 கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் துறையின் இதர கால்நடை மருத்துவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் மறுமலர்ச்சிப் பயிற்சிகளின் கருத்தரங்க துவக்கவிழா சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பேசிய கால்நடைத்துறை அமைச்சர் மாண்புமிகு கீதாஜீவன் அவர்கள் கால்நடை வளர்ப்போரின் தேவைகளை அறிந்து சேவை செய்ய வேண்டும் எனவும் அரசின் நலத்திட்டங்கள் கிராமப்புற விவசாயிகளைச் சென்றடையும் வகையில் பணியாற்ற வேண்டும் எனவும் கூறினார். கிராமப்புறங்களில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதை மனதில் கொண்டு ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைத்து மக்களிடமும் இன்முகம் காட்டி சேவை செய்து பொதுமக்களிடம் நற்பெயர் வாங்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

விழாவில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலர் செல்வி. லீனா நாயர். இ.ஆ.ப., கால்நடை பராமரிப்புத்துறை ஆணையர் திரு. பி.ஆர்.சம்பத். இ.ஆ.ப., மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர். மரு.பி. தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இப்பயிற்சியில் சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கால்நடை மருத்துவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

---

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9